DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 102/2017 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 10 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜெயராணி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of 07.08.2024

**முதல் விசாரனை:**

அரசு மருத்துவமனை தேவகோட்டையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணிபுரிந்து விருப்ப ஓய்வில் இருக்கிறேன். 13.01.2007 அன்று காலை நான் அரசு பணியில் இருந்த போது வேலுச்சாமி என்பவர் தேவகோட்டைய சேர்ந்த கோபாலன் மகனான சுந்தரம் என்பவரை சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 ஆண் அடையாளம் தெரியாத 4 ஆண் தன்னை கம்பி, அரிவாள் மற்றும் உருட்டுக்கட்டையால் அன்று காலை 8.50 மணிக்கு கடையில் வைத்து தாக்கினார்கள். அவரை பரிசோதித்த கீழ்கண்ட காயங்கள் இருந்தன. பரிசோதிக்கும் போது சுயநினைவுடன் இருந்தார். காயம் இடது மணிக்கட்டின் உட்பகுதியில் 0.5 X 2.5 cm அளவில் காயம் இருந்தது. வலது உட்கையின் உட்பகுதியில் 2 செ.மீ X 1 செ.மீ அளவில் ஒரு சிதைத்த காயம் இருந்தது. இடது காலில் மேல் பகுதியில் பரவலான வீக்க காயம் இருந்தது. வலது முன்னங்யையில் இரத்தகட்டும் பரவலான வீக்க காயம் இருந்தது. நுண் கதிர் பரிசோதனை செய்ததில் இடது காலில் டிபியா எலும்பில் ஒரு எலும்பு முறிவு இருந்தது. வலது கையில் அல்னா எலும்பு முறிவு இருந்தது. மேல் சிகிச்சைக்காக இராஜாஜி அரசு மருத்துவமனை மதுரைக்கு பரிந்துரை செய்யப்பட்டார்.

அதே சம்பவத்தில் காயம்பட்டு 8.50 மணிக்கு சண்முகசுந்தரம் அவர்களின் மகனாகிய கோபால் என்பவரும் சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்து கீழ்கண்ட காயங்கள் இருந்தன. அவர் சுய நினைவுடன் இருந்தார். இடது முன்னங்கையில் மேல் பாகத்தில் வெளிப்புறமாக பரவலான வீக்க காயம் இருந்தது. இடது முழங்கை 1 X 5 cm ஒரு சிதைந்த காயம் இருந்தது. வலது முன்னங்கையில் பரவலான வீக்கமும் 1 X .5 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயமும் இருந்தது. வலது தொடையில் 2 X .5 cm ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. இடது காலில் 1 X .5 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. வலது காலில் முன்பகுதியில் 1 X .5 cm அளவில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. வலதுபக்கம் காலில் 2 வது விரலில் .5 X .2 cm அளவில் ஒரு சிறு காயம் இருந்தது. வலது வயிற்று பகுதியின் மேல் பகுதியில் வலிஇருரப்பதாக கூறினார். அவருக்கு நுண் கதிர் பரிசோதனை செய்ததில் வலது கையில் அல்னா எலும்பு மற்றும் இடது கையில் அல்னா எலும்பு முறிவு இருந்தது. மேல் சிகிச்சைக்காக இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் தற்போது அசல் சான்றிதழை பார்த்து சாட்சியம் அளிக்கவில்லை. அசல் ஆவணத்தை நோயாளியிடம் கொடுத்துவிட்டேன். மேற்படி நபர்கள் சிகிச்சைக்கு சேர்த்தது குறித்து போலிஸ்சாருக்கு தகவல் தெரிவித்துவிட்டேன். காவல் துறைவழக்கு என்றால் காயச்சான்றிதழை போலிஸ்சாரிடம் தான் கொடுப்பது வழக்கம். நோயாளிக்கு எடுக்கப்பட்ட நுண் கதிர் படத்தை தற்போது கொண்டு வரவில்லை. போலிஸ்சார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. நோயாளிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் கீழே விழுந்தாலோ இருசக்கர வாகனத்தில் சென்று விழுந்தாலோ ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பு இல்லை. கடினமான தரையில் விழும் போது அல்னா எலும்பு உடைய வாய்ப்பு உண்டு. அசல் ஆவணங்களை பரிசோதனை செய்து சாட்சியம் அளிக்காததால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்ற சொன்னால் சரியல்ல. போலிஸ்சார் என்னை விசாரிக்க வில்லை என்றும் அவ்வாறு விசாரித்து இருந்தால் என் பெயரை சாட்சி பட்டியலில் போட்டு இருப்பார்கள் என்றும சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.